அசல்

6.1.1906 கோபால கிருஷ்ண ராவ்,
அசல் -1 நகல் -1

77, காமாக்ஷி ஜோஸ்யர் தெரு
கும்பகோணம்
p 240
6-1-1906.

மகாகுணம் பொருந்திய பிரம்மஸ்ரீ. மகா
மஹோபாத்யாய தமிழ்ப்பண்டிதர்
உ.வே. சாமிநாத அய்யர் அவர்களு
க்கு கோபாலகிருஷ்ணராவ் நமஸ்
கரித்து வணக்கமாய் எழுதிக்கொ
ண்ட விஞ்ஞாபனம். உபயக்ஷேமம்.
நேற்றையதினம் காலையில் தங்க
ளுக்கு மகாமஹோபாத்யாய என்
னும் சொல்லுகிற மிகவும் மேன்மை
யான கௌரவதாபட்டத்தை. கவ
ர்ன்மெண்டார் அளித்திருக்கிறார்
களென்று எனக்குத் தெரிய வந்தது.
அப்பொழுது எனக்கு உண்டான
சந்தோஷம் சொல்லிமுடியாது.
தங்கள் அளவற்ற அறிவு, சிறந்த கு
ணதிசயங்கள் தங்களிடத்தில் கற்
றும் பழகியும் அநுபவித்தவர்களே
அறிவார்கள். தங்களை தேவதாம்ச
மென்றே, நான் எண்ணுகிறேன். தங்
களிடத்தில் நான் எப்பொழுதும் பூர்
ணமான பக்தியும் விஸ்வாஸமும்
வைத்து சதா போற்றிவருகிறேன்.

அசல்

6.1.1906 கோபாலகிருஷ்ண ராவ்,

அசல் -1 நகல் -1

பதிலாயிற்று

POST CARD.

COMMUNICATION TO BE WRITTEN HERE.

நான் கடவுளை, தங்களுக்
கு நீண்ட ஆயுளையும் தே
கசௌக்கியத்தையும்
கொடுத்து அருள்புரியவே
ணுமாய்ப் பிரார்த்திக்கிறே
ன். தேவரும், நமஸ்காரம்
தங்கள் மாணாக்கன்.
கோபாலகிருஷ்ணராவ்.

THE ADDRESS TO BE WRITTEN HERE.

மகா- ள- ள-ஸ்ரீ
மகாமஹோபாத்யாய
பிரம்மஸ்ரீ உத்தமதான
புரம். வே. சாமிநாத
அய்யர் அவர்கள்
தமிழ்ப்பண்டிதர்
திருவேட்டீஸ்வரன்பேட்டை
திருவல்லிக்கேணி

MOUNT-ROAD 7 JA 06 MADRAS

The General Supplies Co., Mylapore, Madras.

நகல்

77, காமாக்ஷி ஜோஸ்யர்
தெரு,
கும்பகோணம்.

6 - 1 - 1906

மகாகனம் பொருந்திய பிரம்மஸ்ரீ மகாமஹோபாத்
யாய, தமிழ்ப் பண்டிதர் உ. வே. சாமிநாத அய்யர் அ
வர்களுக்கு கோபாலகிருஷ்ண ராவ் நமஸ்கரித்து
வணக்கமாய் எழுதிக்கொண்ட விஞ்ஞாபனம். உபய
க்ஷேமம். நேற்றையதினம் காலையில் தங்களுக்கு
மகா மஹோபாத்யாய என்று சொல்லுகிற மிகவும்
மேன்மையான கௌரதா பட்டத்தை, கவர்ன்
மெண்டார் அளித்திருக்கிறார்களென்று எனக்குத்
தெரிய வந்தது. அப்பொழுது எனக்கு உண்டான
சந்தோஷம் சொல்லிமுடியாது. தங்கள் அளவற்ற
அறிவு, சிறந்த குணாதிசயங்கள், தங்களிடத்தில் தந்
றும் பழகியும் அநுபவித்தவர்களே அறிவார்கள்.
தங்களை தேவதாம்சமென்றே, நான் எண்ணுகிறேன்.
தங்களிடத்தில் நான் எப்பொழுதும் பூர்ணமான பக்
தியும் விச்வாஸமும் வைத்து சதா போற்றிவருகி
றேன்.

நான் கடவுளைத் தங்களுக்கு நீண்ட ஆயு
ளையும் தேக சௌக்கியத்தையும் கொடுத்து அருள்
புரிய வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

வேணும், நமஸ்காரம்.

தங்கள் மாணாக்கன்,

கோபால கிருஷ்ணராவ்.

நகல்

33

கும்பகோணம்
கோபால கிருஷ்ணராவ்.
6. 1- 1906
வரி. 22. பக். 1

ஸ்ரீ.

Page 621 to 622.

F 246-241

203